**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 552** **நாள்: 08.10.2026**

**மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ.க.அருண்ராஜ் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட கெங்கையம்மன் கோவில் தெருவில் நடைபெற்ற காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (08.10.2026) மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் கோ.க.அருண்ராஜ் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-130க்குட்பட்ட வடபழனி, கெங்கையம்மன் கோவில் தெருவில் நடைபெற்ற காய்ச்சல் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவச் சிகிச்சைகள் குறித்து ஆய்வு செய்தார்.

பின்னர், அம்முகாமில் பொதுமக்களுக்கு டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட கொசுப்புழு உருவாகும் விதம், அவற்றை அழிக்கும் முறை குறித்த கண்காட்சியினையும், அப்பகுதியில் உள்ள வீடுகள்தோறும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான இயந்திரங்களின் செயல்பாடுகளையும், களப்பணியாளர்கள் மூலம் வீடுவீடாக மேற்கொள்ளப்படும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மருத்துவர் சம்பத் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**பின்னர் செய்தியாளர் சந்திப்பில் மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

டெங்கு தடுப்பு நடவடிக்கையின் முக்கிய பகுதியாக கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் முயற்சிகள் கோடம்பாக்கம் மண்டலத்தில் மேற்கொள்ளப்படுவதை இன்று ஆய்வு செய்துள்ளோம். இந்த கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் கண்டிப்பாக அவசியம். இன்று ஒரு வீட்டைப் பார்வையிட்டபோது, அவற்றுக்கு உரியவர்களுக்கே தெரியாமல் சில இடங்களில் மழைநீர் தேங்கி கொசுப் புழுக்கள் உருவாகும் சூழல் இருந்தது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீட்டை மீண்டுமொருமுறை பார்க்க வேண்டும். வீட்டிற்குள்ளும், வீட்டைச் சுற்றிலும், குறிப்பாக மொட்டை மாடியிலும் சென்று பாருங்கள். தேவையற்ற பாத்திரங்கள், சிறிய தொட்டிகள், மூடி, ஆட்டுக்கல், பயன்படுத்தாத

பூந்தொட்டிகள் என எதுவாக இருந்தாலும், மழைநீர் தேங்கக்கூடிய வாய்ப்புள்ளவற்றை அப்புறப்படுத்த வேண்டும். அரசு எந்த அளவிற்கு முயற்சி செய்கிறதோ, அதே அளவிற்குப் பொதுமக்களாகிய நீங்களும் சிறு பங்களிப்பைத் தந்தால் மட்டுமே டெங்கு நோய் வராமல் தடுக்க முடியும்.

வீடு வீடாக வந்து கொசு ஒழிப்புப் பணிகளை ஆய்வு மேற்கொள்ளும் களப்பணியாளர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். நாம் கவனிக்கத் தவறிய இடங்களை அவர்கள் கண்டறிவார்கள்.

**செய்தியாளர்**:

கொசுப் புழுக்கள் உருவாகக் காரணமான இடங்கள் தனியார் அல்லது அரசுக்குச் சொந்தமானதாக இருந்தாலும் அபராதம் விதிக்கப்படுமா?

**மாண்புமிகு அமைச்சர்**:

பெரிய நிறுவனங்கள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவன அமைப்புகள் தங்கள் வளாகங்களில் மழைநீர் தேங்கும் வகையில் அலட்சியமாக வைத்திருந்தால், முதல் முறை பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும். மீண்டும் தவறினால் கூடுதல் அபராதம் விதிக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் இதுவரை ரூ.7.50 இலட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் இந்தத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் மட்டுமின்றி, பலமுறை எச்சரித்தும் நடவடிக்கை எடுக்காத சில வீடுகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பெரு நிறுவனங்களில் அதிக அளவில் நீர் தேங்கினால் உடனடியாக ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

மாநிலம் முழுவதும் தினந்தோறும் சராசரியாக 1,000 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, இரண்டு வார்டுகளுக்கு ஒரு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, காய்ச்சல் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு, டெங்கு உறுதிசெய்யப்பட்டால் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. இன்று கோடம்பாக்கம் முகாமிற்கு வந்த 50 பேரில் ஒருவருக்கு காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டு, அவருக்கு தொடர் கண்காணிப்பும், மருத்துவச் சிகிச்சையும் வழங்கப்படும்.

**செய்தியாளர்**:

தற்போது தமிழ்நாடு முழுவதும் டெங்கு பாதிப்பு நிலவரம் என்ன?

**மாண்புமிகு அமைச்சர்**:

ஜனவரி 1 முதல் அக்டோபர் 7 வரை தமிழ்நாடு முழுவதும் 21,655 பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது; இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். சென்னையில் பாதிப்புகள் படிப்படியாகக் குறைந்து சீரான நிலைக்கு வந்துள்ளன. இருப்பினும், பருவமழை தொடங்கவுள்ளதால் பொதுமக்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

**செய்தியாளர்** :

காவ்வாய் பணிகள் குறித்து...

**மாண்புமிகு அமைச்சர்**:

சென்னையில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 அமைச்சர்களையும், 15 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் நியமித்துள்ளார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. இந்த மாத இறுதிக்குள் அனைத்துப் பணிகளும் நிறைவடையும்.

**செய்தியாளர்** :

மாநகராட்சியில் எத்தனை கொசு ஒழிப்புப் பணியாளர்கள் உள்ளனர்?

**மாண்புமிகு அமைச்சர்**:

கொசு ஒழிப்புப் பணிகளுக்காக சென்னை மாநகராட்சியில் மட்டும் 3,700 கொசு ஒழிப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்காக கொசுக்கொல்லி மருந்துகள் மற்றும் புகைப் பரப்பும் இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன. கொசுவின் வளர்ச்சி சுழற்சி 7 நாட்கள் என்பதால், 7 நாட்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு வீட்டிற்கும் களப்பணியாளர்கள் சென்று ஆய்வு செய்வது அவர்களின் பணியாகும்.

**செய்தியாளர்** :

எந்தெந்த பகுதிகளில் டெங்கு பாதிப்பு அதிகமாக உள்ளது :

**மாண்புமிகு அமைச்சர்** :

டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதிகள் மற்றும் கொசுப்பு கண்டறியப்பட்ட பகுதிகளில் முக்கிய பகுதிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு அங்கு கூடுதலாக கொசு ஒழிப்பு களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு தொடந்து கண்காணிக்கப்படுகிறது. இரண்டு வாரங்களுக்கு முன்பு 500 முக்கிய இடங்களாக கண்டறியப்பட்டிருந்தது. தற்போது அது 300 இடங்களாக குறைந்துள்ளது.

**செய்தியாளர்**:

தற்போது எத்தனை பேர் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெற்று வருகிறார்கள்?

**மாண்புமிகு அமைச்சர்**:

தற்போது வரை 301 பேர் டெங்கு பாதிப்பால் உள்நோயாளிகளாகச் சிகிச்சையில் உள்ளனர். அரசு மருத்துவமனைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாகக் காய்ச்சல் வார்டுகளும், குழந்தைகள் காய்ச்சல் சிகிச்சைக்கான தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

**செய்தியாளர்** :

முகக்கவசம் அணிவது குறித்த வழிகாட்டுதல் என்ன?

**மாண்புமிகு அமைச்சர்:**

முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்படவில்லை, ஆனால் அணிந்து செல்வது பாதுகாப்பானது எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**